**ஆகஸ்ட் – 02**

# TNPSC துளிகள்

- எட்டாவது வருடாந்திர நெகிழி சேகரிப்பு இயக்கமானது கேரளாவில் உள்ள வேம்பநாட்டு ஏரியில் தொடங்கியது.
  - இது ஒரு இராம்சார் தளமாக அடையாளப்படுத்தப் பட்டதாகும். உலகின் மிகவும் மாசுபட்ட நீர் நிலைகளில் ஒன்றாகவும் இது விளங்குகின்றது.
- எத்தியோப்பியப் பிரதமர் அபிய் அகமது "பசுமை மரபு முன்னெடுப்பு" என்ற ஒரு தேசிய அளவிலான மரம் நடுதல் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.
  - இத்திட்டத்தின் கீழ் ஒரே நாளில் 350 மில்லியனிற்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளன. இது ஒரு உலக சாதனையாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.
- 200 யூனிட்டுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தும் மக்களுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்படும் என்று தில்லி அரசு அறிவித்துள்ளது. 201 யூனிட்டுகள் முதல் 400 யூனிட்டுகள் வரையிலான மின்சாரத்தைப் பயன்படுத்தும் மக்களுக்கு மாநில அரசினால் 50 சதவிகித மானியம் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது திடக் கழிவு மேலாண்மைக்காக "நீர்ம வெப்ப கரிமமாக்கல்" (Hydro Thermal Carbonization - HTC) என்ற ஒரு புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்தியுள்ளது.
  - HTC தொழில்நுட்பமானது நகராட்சித் திடக் கழிவை உயிரி எரிபொருள், மாற்றியமைக்கப்பட்ட மண் மற்றும் உறிஞ்சிகளாக மாற்றும் திறன் கொண்டது. திடக் கழிவை திறமையுடன் கையாளுவதற்கு உள்ளூர் அமைப்புகளினால் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.
- காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் (CTTF - Commonwealth Table Tennis Federation) தலைவராக இந்தியாவைச் சேர்ந்த விவேக் கோலியும் அதன் பொதுச் செயலாளராக MP சிங்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
  - CTTFன் தற்போதையத் தலைவர் துஷ்யந்த் சௌதாலா ஆவார். முதன் முறையாக தற்பொழுது CTTFன் அனைத்து மூன்று பதவிகளும் இந்தியர்களால் வகிக்கப்படுகின்றது.

# தேசியச் செய்திகள்

## தண்ணீர்ப் பற்றாக்குறைக் குறியீடு

- தண்ணீர்ப் பற்றாக்குறைக் குறியீட்டின் படி, நாட்டில் உள்ள 20 மிகப் பெரிய நகரங்களில் 11 நகரங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறை அபாயத்தை எதிர் கொண்டிருக்கின்றன.
- இக்குறியீடானது இலண்டனில் உள்ள அபாயப் பகுப்பாய்வு நிறுவனமான வெரிஸ்க் மேப்பிள் குரோப்டினால் தயாரிக்கப்பட்டது. இது உலகின் 46-வது அபாயமுள்ள நாடாக இந்தியாவைப் பட்டியலிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் துறை ஆகியவற்றின் தண்ணீர் நுகர்வு விகிதம் மற்றும் நதிகள், ஏரிகள், ஓடைகள் ஆகியவற்றின் நீர் வளங்கள் ஆகியவற்றைக் கணக்கிடுகின்றது.
- தில்லி, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், நாசிக், ஜெய்ப்பூர், அகமதாபாத் மற்றும்

இந்தூர் ஆகிய நகரங்கள் "மிகவும் அபாயத்தை" எதிர் கொண்டிருக்கின்ற நகரங்களாகும்.

## ஊட்டச்சத்தை அடிப்படையாகக் கொண்ட மானியம்

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவையானது 2019-20 ஆம் ஆண்டிற்கான பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான ஊட்டச்சத்தை (Nutrient Based Subsidy - NBS) அடிப்படையாகக் கொண்ட மானியத் தொகைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது உரத் துறையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- NBS செயல்முறையின் கீழ், பின்வரும் ஊட்டச்சத்துகளுக்கு அவற்றின் ஒரு கிலோ கிராம் எடையின் அடிப்படையில் வருடாந்திர மானியம் நிர்ணயிக்கப்பட விருக்கின்றது.
    - நைட்ரஜன் (N)
    - பாஸ்பேட் (P)
    - பொட்டாஷ் (K)
    - சல்பர் (S)
- போரான் மற்றும் துத்தநாகம் போன்ற பிற நுண் ஊட்டச்சத்துகளுடன் கூடிய உரங்களின் எந்தவொரு வகையும் தனிப்பட்ட மானியத்திற்குத் தகுதியுடையதாகும்.
- இது உரங்கள் மற்றும் உரங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பொருட்களுக்கான விநியோக ஒப்பந்தங்களை முறைப்படுத்த உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் ஆகியோரை அனுமதிக்கும். மேலும் இது 2019-20 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்கின்றது.

## உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

- இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி உள்பட உச்ச நீதிமன்றத்தில் தற்பொழுதுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையை 31லிருந்து 34 ஆக அதிகரிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான மசோதாவானது நாடாளுமன்ற ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றது.
- உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) சட்டம், 1956 ஆனது தொடக்க காலத்தில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைத் தவிர்த்து அதிகபட்சம் 10 நீதிபதிகள் பணியாற்ற வழிவகை செய்துள்ளது.
- இந்தச் சட்டமானது நீதிபதிகளின் எண்ணிக்கையை 25லிருந்து 30 ஆக (உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைத் தவிர) அதிகரிப்பதற்காக கடைசியாக 2009 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

## மனித உரிமைகள் பாதுகாப்பு (திருத்த) மசோதா 2019

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 ஐ திருத்தும் மனித உரிமைகள் பாதுகாப்பு (திருத்த) மசோதா 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- 1993 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (National Human Rights Commission - NHRC) தலைவராக நியமிக்கப்படுபவர் ஓய்வு பெற்ற உச்ச

நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும்.

- ஆனால் தற்பொழுது இந்தியாவின் தலைமை நீதிபதியோ அல்லது ஏதேனும் உச்ச நீதிமன்ற நீதிபதியோ இந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம்.
- இது போலவே, மாநில மனித உரிமைகள் ஆணையமானது ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி அல்லாமல் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உள்பட எந்தவொரு உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையிலும் செயல்படலாம்.
- முந்தைய சட்டமானது மனித உரிமைகள் குறித்த அறிவைக் கொண்ட 2 நபர்களை NHRCன் உறுப்பினர்களாக நியமிக்க வழிவகை செய்கின்றது.
- ஆனால் திருத்தப்பட்ட மசோதாவானது மூன்று நபர்களை உறுப்பினர்களாக நியமிக்கவும், அவர்களில் குறைந்தபட்சம் ஒரு நபராவது பெண்ணாக இருக்கவும் வழிவகை செய்கின்றது.
- இந்தத் திருத்தமானது உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் அல்லது உறுப்பினர்கள் 70 வயதைப் பூர்த்தி செய்யும் வரை, இவற்றில் எது முதலில் வருகிறதோ அவற்றின் அடிப்படையில் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை குறைத்துள்ளது. இதற்கு முன்பு உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.
- மேலும் இந்தத் திருத்தம் NHRC மற்றும் SHRC-ன் உறுப்பினர்களை 5 ஆண்டு காலத்திற்கு மீண்டும் உறுப்பினர்களாக நியமிக்க அனுமதிக்கின்றது. இவ்வகையில் இந்தத் திருத்தமானது “மறு நியமனத்திற்கான” 5 ஆண்டு காலக் கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது.
- 1993 ஆம் ஆண்டின் சட்டமானது NHRCன் பொதுச் செயலாளர் மற்றும் SHRC-ன் செயலாளர் என்ற பதவிகளை உருவாக்க வழிவகை செய்துள்ளது. இவர்கள் NHRC மற்றம் SHRCன் தலைவர்களினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துவர்.
- இந்தத் திருத்தத்திற்குப் பின்பு, NHRC மற்றும் SHRCன் (State Human Rights Commission) தலைவர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பொதுச் செயலாளர்கள் நீதி சார்ந்த பணிகளைத் தவிர, அனைத்து நிர்வாக மற்றும் நிதி சார்ந்த (நீதி சாராத) பணிகளை மேற்கொள்வர்.
- தற்போதைய மனித உரிமைகள் ஆணையம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையத்தின் தலைவர், குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தலைமை ஆணையர் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும்.
- இந்த மசோதாவானது ஒன்றியப் பிரதேசங்களினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை ஆணையத்தின் பணிகளை தேவைப்பட்டால் மத்திய அரசு அப்பணிகளை SHRC மேற்கொள்ள வழிவகை செய்கின்றது. புது தில்லியைப் பொறுத்தவரை மனித உரிமைகள் தொடர்பான பணிகளை தேசிய மனித உரிமைகள் ஆணையமே கவனிக்கும்.

## ஒரே தேசம் ஒரே அட்டை

- தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு மிகப் பெரிய அளவில் ஊக்கம் அளிக்கும் விதமாக மத்திய அரசு பின்வரும் மாநிலங்களில் “ஒரே தேசம் ஒரே அட்டை” என்ற ஒரு திட்டத்தை சோதனை முறையில் தொடங்கியுள்ளது.
    - தெலுங்கானா
    - ஆந்திரப் பிரதேசம்
    - மகாராஷ்டிரா
    - குஜராத்

- இந்த முன்னோடித் திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 லிருந்து நடைமுறைக்கு வருகின்றது.
- ஒரே தேசம் ஒரே அட்டை என்ற திட்டமானது உணவுப் பாதுகாப்புப் பயன்களின் விரிவாக்கத்தை அனுமதிக்கக் கோருகின்றது.
- உணவுப் பாதுகாப்பு அட்டைகளை வைத்துள்ள குடும்பதாரர்கள் இந்த மாநிலங்களில் எந்தவொரு நியாய விலைக் கடைகளிலும் மானிய விலையிலான அரிசி மற்றும் கோதுமையைப் பெற முடியும். ஆனால் இந்தச் சேவையைப் பெறுவதற்கு இவர்களுடைய நியாய விலை (குடும்ப) அட்டைகள் ஆதார் எண்ணுடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

# சர்வதேசச் செய்திகள்

## நாகர் கீர்த்தன் - குரு நானக்கின் 550வது நினைவு தினம்

- பிரிவினைக்குப் பின்பு முதன் முறையாக பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலுள்ள நன்கானா சாஹிப் மாவட்டத்திலிந்து வெளியே எடுத்து வரப்பட்ட குரு கிரந்த சாஹிப்பைக் கொண்டுள்ள "நாகர் கீர்த்தன்" ஆனது இந்தியாவின் அமிர்தசரஸில் உள்ள அட்டாரிக்கு வந்தடைந்தது.
- "நாகர் கீர்த்தன்" என்பது ஒரு மதம் சார்ந்த பேரணியாகும்.
- இந்தப் பேரணியானது சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் தேவின் 550வது பிறந்த தின நினைவை அனுசரிப்பதற்காக பக்தர்களால் நடத்தப்பட்டது.
- இது இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் கபுர்தலா மாவட்டத்தில் உள்ள சுல்தான்பூர் லோதி என்ற இடத்தில் நிறைவடையவிருக்கின்றது.
- குரு நானக் தேவ் என்பவர் 1469 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் லாகூரிற்கு அருகில் உள்ள தால்வண்டி என்ற கிராமத்தில் பிறந்தார். இந்தக் கிராமம் தற்பொழுது நன்கானா சாஹிப் என்று அழைக்கப்படுகின்றது.

## நடுநிலை (மத்தியஸ்தம்) மீதான சிங்கப்பூர் தீர்மானம்

- பிரதம அமைச்சரின் தலைமையிலான அமைச்சரவைக் குழுவானது சர்வதேசத் தீர்வு ஒப்பந்தங்கள் மீதான ஐக்கிய நாடுகள் தீர்மானத்தில் (UN Convention on International Settlement Agreements - UNISA) கையெழுத்திடுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- UNISA ஆனது 2018 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது சிங்கப்பூரில் அதிகாரப் பூர்வமாகக் கையெழுத்திடப்பட விருக்கின்றது.
- இந்த ஒப்பந்தமானது "நடுநிலை மீதான சிங்கப்பூர் தீர்மானம்" என்று அழைக்கப்பட விருக்கின்றது.
- இது மத்தியஸ்தத்தின் விளைவாக ஏற்படும் "சர்வதேச தீர்வு ஒப்பந்தங்களை" அமல்படுத்துவதற்கும் அத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்ள பிற நாடுகளை அனுமதிப்பதற்கும் ஒரு சீரான கட்டமைப்பை வழங்குகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## காச நோய் மருத்துவ சிகிச்சை - முன்னோட்டம்

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆணையம் 2 புதிய

காச நோய் மருந்துகளுக்காக இந்தியாவின் முதலாவது மிகப் பெரிய சோதனை முன்னோட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- சமீபத்திய சோதனை முன்னோட்டத்தில் 2 காச நோய் தடுப்பு மருந்துகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவையாவன
    - இம்முவாக் (மைக்கோபாக்டீரியம் இண்டிகஸ் பிரணி என்றும் அழைக்கப்படுகின்றது) - அகமதாபாத்தில் உள்ள கேடிலா என்ற மருந்து நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
    - VPM1002 - புனேவில் உள்ள செரம் இந்தியா நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது.
- தற்பொழுது பிசிஜி தடுப்பு மருந்து (பேசிலி கால்மெட்டி கியூரின்) பயன்படுத்தப்படுகின்றது.
- இது 100 ஆண்டு காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்களில் நுரையீரல் சார்ந்த நோய்களுக்கு மிகக் குறைந்த அளவிலான பாதுகாப்பை அளிக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## கைபேசி நூலகப் பேருந்துகள் - தில்லி

- மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறைக்கான இணை அமைச்சர் கைபேசி நூலகப் பேருந்துகளைப் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்தப் பேருந்துகள் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் இருந்து பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் வாங்கப்பட்டுள்ளன.
- இந்தக் கைபேசி நூலகப் பேருந்துகள் தில்லி பொது நூலகத்தின் “ஹர் ஹர் தஸ்தக் ஹர் ஹர் புஸ்தக்” என்ற திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இத்திட்டத்தின் கீழ், தில்லி பொது நூலகமானது ஆனது தில்லி மக்களுக்கு, குறிப்பாக சேரிகள், மீள்குடியேற்ற காலனிகள் மற்றும் கிராமப் புறங்களில் வசிப்பவர்களுக்குப் புத்தகங்கள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தில்லி பொது நூலகம் என்பது யுனெஸ்கோ மற்றும் மத்திய அரசின் உதவியுடன் 1951 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒரு தேசியக் காப்பக நூலகமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★